# கவிஞர் தங்கம்மூர்த்தி கவிதைகளில் மொழி ஆளுமை

**க.விஜயலெட்சுமி**

பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

தமிழாய்வுத் துறை

மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி (தன்னாட்சி)

புதுக்கோட்டை

ஆய்வு நெறியாளர்: **முனைவர் சி.அமுதா**

**ஆய்வுச்சுருக்கம்**

நீண்ட நெடிய மரபினைக் கொண்ட தமிழ் இலக்கிய மரபில் சங்க காலம் தொடங்கி, இன்றைய நவீன கால இலக்கியங்கள் வரை, படைப்புகளின் உருவம் மற்றும் உள்ளடக்கங்களில் பல்வேறு மொழி ஆளுமைகள் தோற்றம் பெற்றுள்ளன. மனித வாழ்க்கை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெறவும், முன்னேற்றமடையவும் ஆராய்ச்சி மிகவும் இன்றியமையாததாகும். முறையான ஆய்வுகளும் அவற்றை அறிவுப்பூர்வமாகப் பயன்படுத்தலும் இல்லாமலிருந்தால் இன்று நாம் காணும் மிகப்பெரிய முன்னேற்றங்கள் சாத்தியமாகி இருக்காது. ஆய்வுகளின் மூலமே புதிய உண்மைகள் கண்டறிப்பட்டுப் புதிய செயல்முறைகளும் விளை பொருட்களும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அதன் வகையில் கவிதைகள் மூலமாகப் பல்வேறு கவிஞர்கள் தொலைநோக்குப் பார்வையில் சமூகத்தைப் பார்வையிட்டுச் சமூக அக்கறை கொண்டு பல்வேறு வகையில் சமூக மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். புதுமைகள் படைக்கிறார்கள். மக்கள் மனதில் இடம் பிடிக்கிறார்கள்.

மக்களுக்கு அறிவூட்டலும், மகிழ்வூட்டலும் ஆகிய குறிக்கோள்களுடன் இலக்கியங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கமும், நேர்மையும் உடையவனாக இருக்க வேண்டும். தனிமனிதனின் அகப்புற ஒழுக்கங்கள் சமுதாயத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. அதனை வலியுறுத்திப் பல கவிதை நூல்கள் வெளியிட்டுள்ள கவிஞர் தங்கம்மூர்த்தி அவர்களின் கவிதைகளை ஆய்விற்கு எடுத்துக்கொண்டு இக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்** : புதுக்கவிதை, கவிஞர் தங்கம் மூர்த்தி, கவிதை ஆளுமை, தமிழ்க்கவிகள், புதுக்கவிஞர்கள்.

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

**முன்னுரை**

கவிஞர் தங்கம்மூர்த்தியின் கவிதைகளில் தாய்மொழியின் சிறப்பு, பெருமை, புதுமை, எளிமை, இனிமை, இளமை, தொன்மை உணரப்படுகிறது. இவரது கவிதைகள் மூலம் இவரது கவி ஆற்றலையும், நோக்கில் புதுமையையும், உலகியல் யதார்த்த நிலைமைகளைச் சுட்டிக்காட்டும் இயல்பையும் மனித நேயத்தையும் நன்கு வெளிப்படுத்தி இருப்பது தமிழ்மொழி ஆளுமைக்குச் சான்றாகும். எளிமையான நடையில் அனைவரும் எளிதாகப் புரிந்து மகிழும் வகையில் எளிய சொற்களைக் கையாண்டிருப்பது தமிழ் மொழியின் ஆளுமை வளத்தைக் காட்டுகிறது. இதனைக் இக்கட்டுரை வழி விளக்கப்படுகிறது. மரபு ஓசையிலும் கூட வெற்றுச் சொற்களை இட்டு விரவி நிரப்பாமல் ஒழுகுவது அபூர்வம், வறுமைப்பற்றி பாடும்போது,

**“பசியால் குழந்தை கதறும்**
**தாய்ப்பாலின்றித் தாலாட்டுச் சிதறும்”**

என்னும் இவ்வரிகள் வறுமையின் கொடுமையால் தினமும் நிகழும் அவலங்களைச் சுட்டிக்காட்டுகின்றது.

**“வருசக் கணக்காய் செத்துக்கிடந்தேன். ஒரு**
**வார்த்தை சொன்னாய் வானில் பறந்தேன்”.**

இது காதல் வயப்பட்ட மாந்தர்களின் நிலைகளைக் கவிதை வரிகளில் வழங்கிய சிறப்பு எனலாம்.

**கண்ணிலாதவர்கள்**
**கையேந்திய போது**
**நாமெல்லாம் குருடர்கள்**

போன்ற வரிகள் நம் நெஞ்சுக்குள் வேல் பாய்ச்சும் வரிகள். இதில் மனித நேய உணர்வுகள் இன்னும் வளர்ச்சியில்லாக் குழந்தையாக இருக்கிறது என்பதை உணரச் செய்துள்ளார். மேலும் இன்றைய நடைமுறை எதார்த்தங்களை தனது கவிதை மொழியின் ஆளுமையால் வெளிபடுத்திய விதம் போற்றுதலுக்குரியது. இவையாவும் தமிழ்மொழி ஆளுமைகளை உணர்த்தி நிற்கும் வரிகள் எனலாம்.

**மனம் வசப்படுத்துதல்**

உள்ளும், வெளியுமாய் விரிந்து கிடக்கும் வாழ்க்கை களத்தைப் போலத்தான் கவிதை, வெளியும், புறத்தே நின்றுள்ள இயற்கையையும் சமூகத்தையும் பாடும்

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

கவிதைகள் அகத்தைப் பாடும் போது மட்டும் சற்றே உள்ளொடுங்கிப் போய் இருண்மை கவழ வெளிப்படுவது கவிதைப் புதர்களில் ஒன்று. எண்பதுகளில் எழுதத் துவங்கி இன்றைக்கும் கவிதைத் தளத்தில் ஈடுபாட்டோடு இயங்கி வரும் கவிஞர் தங்கம்மூர்த்தியின் கவிதைகள் ஒரே தொகுப்பாக “தங்கம்மூர்த்தி கவிதைகள்” என்கிற நூலாக மலர்ந்துள்ளது. 1995-ல் வெளிவந்து பரவலான பாராட்டுகளைப் பெற்ற “முதலில் பூத்த ரோஜா” என்கிற இவரது முதல் ஹைக்கூ நூலிலுள்ள கவிதைகளும் இக்கட்டுரையில் சேர்க்கப்பட்டுள்ளது.

சிக்கலற்ற எளிய மொழியிலான தங்கம்மூர்த்தியின் கவிதைகள் வாசிப்பாளரின் மனத்தை வசப்படுத்தும் வல்லமை மிக்கவை. ஒரே வாசிப்பில் புரிந்து விட்ட போதிலும் மறுவாசிப்பைத் தூண்டும் வகையில் புதிய ஆர்வத்தைத் தருகின்றன. இன்றைக்கு வேகமாய் வளர்ந்து வரும் அறிவியல் யுகத்தில் தொலைபேசி, செல்போன், இ-மெயில் என வந்துவிட்டதால் கவிதை எழுதுவதென்பது பெருகி வருகிற கலையாகத்தான் மாறி போய்விட்டது. கவிதை எழுதும் ஆற்றலை வளப்படுத்தவே சமூக அக்கறையோடு இவரது கவிதைகள் எடுக்கப்பட்டுள்ளது. கவிஞர் தங்கம்மூர்த்தியின் கவிதைகளில் “முதலில் பூத்த ரோஜா” பொய்யெனப் பெய்யும் மழை, கவிதையில் நனைந்த காற்று (ஹைக்கூ கவிதைகள்) ஆங்கில மொழிப்பெயர்ப்புடன் என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து, தேவதைகளால் தேடப்படுபவன், மேலும் இலக்கிய திறனாய்வாளர்களின் இலக்கிய வரிகள் தேவைப்படும் இடங்களில் துணையாகக் கொள்ளப்படுகின்றன. சோதனைகளைச் சாதனையாக்குபவனே கவிஞன். மனித உள்ளங்களை நேசிக்கத் தெரிந்தவனே கவிஞன். அதன் வகையில் புதுக்கவிதையின் நாயகனாக வளம் வருபவர் புதுக்கவிஞர் தங்கம்மூர்த்தி.

### சொல் ஆளுமை

எல்லா மொழியிலும் ஒரு பொருள் பல சொல்லும், பல பொருள் ஒரு சொல்லும் இயல்பாகக் காணப்படுவது தான். கவிஞர்கள் பல பொருள் ஒரு சொல்லை வைத்துக் கொண்டு சொல் விளையாட்டு மேற்கொள்வார்கள். அதில் நகைச்சுவையோ, எள்ளல் சுவையோ புதைந்திருக்கும். மேலும் அவர்களே புதிய பல பொருள் ஒரு சொல்லைப் படைப்பதும் உண்டு. அதனால் இலக்கியத்தில் புதைந்துள்ள பொது இலக்கியக் கோட்பாட்டையும் கண்டறிய வேண்டும் என்ற சிந்தனையும் பிறந்துள்ளது.

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

அதற்கு அடிப்படையாகக் கவிஞன், கற்பனைக் கவிதை கேட்போர், பாடுபொருள் என்ற நான்கு கூறுகளில் ஒன்றோ, சிலவோ, அமையாத எந்த இலக்கியக் கொள்கையும் இல்லை என்றும் படைப்போன், கேட்போன் அல்லது வாசிப்போன், படைப்புநெறி பாடுபொருள் ஆகியன பற்றி வழங்கும் கருத்தமைவுகளே இலக்கிய கொள்கை என்றும் கூறப்படுகிறது.

**கல்வி**

**கொள்ளையடிக்கும் குபேரர்களுக்கு**
**கூழியாட்களைத் தயாரிக்கிறது.**

என்பதில் குபேரர் என்பது வணிக நிறுவனங்களையும், கல்வி நிறுவனங்களையும் நடத்தும் செல்வந்தர்களையும் கூலியாட்கள் என்பது படித்துப்பட்டம் பெற்று அறிவுச் சுதந்திரம் இல்லாமல் வேலை செய்பவர்களையும் குறிக்கின்றன. பொதுவாக ஒருவருடைய மொழி ஆளுமையின் ஒரு கூறாகப் பார்ப்பது ஒரு நிலை. அதையே கவிதையில் ஒருவரின் கவித்துவத்தின் வெளிப்பாடாகப் பார்ப்பது என்பதும் உண்டு. கவிதைமொழி ஆய்வில், மொழி ஆளுமையாகவும், கவிஞனின் ஆளுமையாகவும், கவித்துவப் புலப்பாடாகவும் சேர்த்துப் பார்ப்பதில் சிறப்பு. இங்கு கவிதையின் மொழி ஆளுமை குறு மொழி ஆளுமை, சொல் ஆளுமை, யாப்பு ஆளுமை என்ற மூன்று நிலையில் மட்டுமே ஆராயப்படுகிறது.

உலக நாடுகள் செம்மொழியென ஏற்றுக்கொண்ட நம் தமிழ் மொழி பெருமைக்குரியது. இதன் பெருமையினை மேலும் வளப்படுத்திடவே இவரது கவிதை வரிகள் அமைந்துள்ளன.

**“மாடு மேய்த்தல்**
**சிரமமான வேலை**
**படித்து விடலாம் “**

என்ற ஹைக்கூ கவிதை படிப்பதன் மூலமே ஒரு மனிதன் விலங்குகளிடமிருந்து வேறுபடுகிறான் என்றும் அவன் படிக்கும் போது நம் மொழியின் பெருமைகளை உணர்வான் என்றும் மையப்படுத்தி கவிதை அமைந்திருப்பது சிறப்பு.

நம் மொழியை எட்டுத்திக்கிலும் புகழச் செய்த பாரதி பாடல் வரிகள் நமக்குள் ஊக்கத்தையும், துணிவையும், தன்னம்பிக்கையினையும் கொடுக்கும் அதைப் போல் கவிஞர். தங்கம் மூர்த்தியின் கவிதை வரிகள் நம்மை பெருமையோடு வாழ்வதற்குத்

துணை செய்யும் ஓர் அரசியல்வாதி மக்களின் தொண்டன் அவன் சுயநலக்காரனாக இருப்பது அவமானம் அவனுக்கல்ல, அவனைத் தேர்வு செய்த மக்களுக்குத்தான் என்பதை துணிவோடு தனது கவிதை வரிகளில் கூறியிருப்பது அவரதுமொழி வளத்தைக் காட்டுகிறது. மொழியை கையாளும் போது அதற்குள் இருக்கும் அர்த்தங்களை வெளிப்படையாகக் கூறி, பிறர் மனம் புண்படாதவாறு, புரிய வேண்டியவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் இன்றைய நாட்டு நிர்வாக முறைகளைக் கூறியிருப்பது இவரது மொழி ஆளுமையைக் காட்டுகிறது.

கவிஞர். தங்கம் மூர்த்தியின் கவிதைகளில் முதலில் பூத்த ரோஜா என்று ஹைக்கூ கவிதையில்

**“மகளிர் கல்லூரி**
**மரத்தடியிலும் பூக்கள்**
**வாசலில் வண்டுகள் “**

என எழுதி இருப்பது மாணவர்கள், இளைஞர்களாகப் பரிணாம வளர்ச்சி பெறும்போது அவர்கள் குறும்புச் செயல்பாடுகள் என்பது இயற்கை தான் என்பதை நாகரீகமாகக் கூறியிருப்பது இவர் மொழியைக் கையாண்ட முறையே நாகரிகமானது என்பதைக் காட்டுகிறது.

**எளிமை ஓர் அடையாளம்**

கவிஞர் தங்கம் மூர்த்தியின் கவிதைகளில் சொல் எளிமைத் தனிச்சிறப்பு. அனைவரும் எளிதில் புரிந்து கொண்டு படிக்க துவங்கும் மொழி நம் தாய்மொழி. எனவே தான் வீரமாமுனிவர். ஜி.யு.போப் போன்றவர்கள் வெளிநாட்டிலிருந்து நம் நாட்டிற்கு வந்து நம் மொழியின்மீது பற்றுக்கொண்டு இம்மொழியினை எளிதாகக் கற்றுக்கொண்டு நம் மொழியின் சிறப்புகளை உலக அளவில் பரப்பினார்கள். இவர்களைப்போல் கவிஞர். தங்கம் மூர்த்தி அவர்களின் கவிதைகளில் எளிமையான சொற்கள் இடம் பெற்றிருக்கும். அதனால் அவை அனைவருக்கும் எளிதில் பொருள் புரியும். கவிதையில் நனைந்து காற்று எனும் கவிதை நூலில்

**பூமிக்கடியில் தோண்டினால்**
**ஊற்று**
**அதுவே**
**புகைந்து மேலெழுந்தால் காற்று**

**ஓடிக் கொண்டிருந்தால் ஓடை**

**அதுவே ஓய்வெடுத்துப் படுத்திருந்தால்**

**குட்டை**

**மணலோடு கலந்து இருந்தால்**

**அதன் பெயர் சேறு**

**மணல் மட்டும் கிடந்தால்**

**அதன் பேர் ஆறு**

இவ்வாறு எளிதில் பொருள் புரியும்படி கவி பாடும் ஆற்றல் கவிஞரின் தனிச்சிறப்பு.

**புதுமை எனும் புதுவனம்**

கவிஞர். தங்கம் மூர்த்தி அவர்கள் புதுமைகள் படைப்பதில் புதுக்கவிதையின் புதுமைக் கவிஞர் என்று சிறப்புறக் கூறினால் பொருத்தமாக இருக்கும். “தேவதைகளால் தேடப்படுபவன்“ எனும் கவிதை நூல் தனிச்சிறப்பான நூல். நாம் தேவதைகளைத் தேடி பார்க்க ஆசைப்படுகிறோம். ஆனால் கவிஞரைத் தேவதைகள் தேடுகின்றன. என்பது மாறுபட்டச் சிந்தனையாக அமைந்துள்ளது. இக்கவிதை நூலில் புதுமையான தகவல்கள் புதைந்துள்ளன. வேறுபட்ட கருத்துகளைப் புதிய வடிவில் கொடுத்து மக்களிடம் கவிதை மீது காதல் ஏற்படுத்தி இருப்பது புதுமையே. இது மொழிவளத்தின் செழுமையே என்பதை அறியலாம்.

கவிஞன் மற்றவர்களைக் காட்டிலும் கூர்ந்த பார்வை கொண்டவன். கவிதை, மனித அனுபவமும் அறிவும் அறியாத புதுத்திசைகளில் பயணம் செய்ய வேண்டும் அப்போதுதான் அது துணிவும் சுவாரசியமும் உடையதாக இருக்கும். அது கண்ணுள்ள புறாக்கள் அறிந்த திசைகளில் அறிந்த இடங்களுக்கே பறந்து கொண்டிருக்கும். கண்ணில்லை என்றால் அதுவும் அறியாத திசை நோக்கி அவை புதியவற்றை நோக்கி பறந்து கொண்டே இருக்கும். அவற்றின் பறத்தலுக்கு முடிவே இல்லை. ஏனெனில் அறியாததற்கும் முடிவில்லை. கவிதையின் பயணம் முடிவுற்றதாக இருக்க வேண்டும் என்கிறார் லோர்கார். இதுவே கவிதையின் பண்பு என அடையாளப்படுத்தப்படுகிறது. கவிதை என்பது ஆழங்களில் இறங்கி மூலத்தை உணர வேண்டும். அஃது ஆன்மாவைத் தொடவேண்டும். அதன் பயணம் புதியதை நோக்கிப் பயணப்பட வேண்டும். இத்தகைய கவிதை அழியாது. இது லோக்காவின் பார்வை.

ஒரு கவிஞன் மனித இனம் முழுவதையும் நேசிக்க வேண்டும். மனிதநேயம் வேண்டும். உண்மையைத் தரிசிக்க வேண்டும். இந்த உண்மை உயர்ந்த கவிதையைத் தந்துவிடும் இது கவிஞர் ஜான் ஜான்டாவின் கருத்து. உயர்ந்த கவிதை என்பது மனிதயினத்தை நேசிப்பது தான். நேசத்தலையில் கட்டும் யாப்பிலக்கணத்தைக் கற்றவனே கவிஞனாகிறான் என்கிறார்.

**முடிவுரை**

மனிதன் தன் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த கையாண்ட கருவியே மொழி. இம்மொழியிலும் முதன் முதலில் கவிதை அல்லது செய்யுள் நடையே பயன்படுத்தப்பட்டு வந்தது. கற்பனை ஆற்றல் வளர்வதற்கு நாம் இயற்கையை நேசிக்க வேண்டும். இயற்கையின் தோற்றம் அழகு வளர்ச்சி அதை பார்க்கும்போது மனத்தில் ஒரு துள்ளல் ஏற்படும் இதுவே சொல் வடிவம் பெற்று அசை, சீர், அடி, தொடையாக, உருமாறி கவிதை வடிவம் தோன்றுகிறது. இதில் உண்மை, யதார்த்தம், நகைச்சுவை, உணர்வு வெளிப்பாடு, விழிப்புணர்வு, ஆகியன கலந்து அறுசுவை உணவு போல் அமையப்பெறும். சமூக அவலங்கள், வறுமை, நாட்டு நடப்பு, காதல், இயற்கை, அறிவியல் தொழில்நுட்பம் கல்வி, இல்வாழ்க்கை, அரசியல் , ஒழுக்கம், நாட்டுணர்வு இவை பற்றிய சிந்தனைகள் மனத்தில் எழும்போது கற்பனை அருவிபோல் கொட்டும். இவைகள் கவிதை வரிகளாக மாறும்போது மக்கள் எளிதில் புரிந்து கொண்டு வாசிப்பார்கள். அதன் பொருள், உண்மை அறிந்து மனம் மகிழ்ச்சி கொள்வார்கள். இது சமுதாயத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். எளிமையான நடையில் அனைவரும் எளிதில் புரிந்து மகிழும் வகையில் கவிஞர் தங்கம் மூர்த்தி எளிய சொற்கள் கையாண்டிருப்பது தமிழ் மொழியின் ஆளுமையை காட்டுகிறது.

தமிழ் மொழி மூத்த மொழி என்று புகழப்படுகிறது. குமரிக்கண்டத்தில் தோன்றிய நம் மொழி இன்றும் உலக அளவில் சிறப்பிடத்தில் உள்ளது. இம்மொழியின் வளர்ச்சிக்கு பல்வேறு நூலாசிரியர் உரை எழுதி வருகிறார்கள். அதன் வகையில் கவிஞர் தங்கம்மூர்த்தி அவர்கள் நம் தமிழ் மொழியின் சிறப்புகளை மேலும் சிறப்புற செய்வதற்குத் தனது கவிதை வரிகள் மூலம் மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகிறார். எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வார்த்தை நயங்களைப் பயன்படுத்திருப்பது மேலும் சிறப்பானது. கிராமப்புற மக்களுக்கு எளிதில் புரிந்து மகிழும்படியான நடையில் படைத்திருப்பது மொழிக்குத் தனிச்சிறப்பு எனலாம்.

**அழகாக பேசுகின்றன**

**பறவைகள்**

**உளறும் மனிதர்கள்**

இவ்வரிகள் பறவைகளின் மொழி அறிவை உயர்வாகச் சொல்லி இருப்பதாகும். இவ்வரிகள் மொழியைச் சிறப்படையச் செய்துள்ளது எனில் மிகையாகா. இவரது படைப்புகள் இலக்கிய வளர்ச்சிக்கு உரமாக அமையும் என்ற நேர்மறை சிந்தனையைத் தூண்டுகின்றன என்பது முற்றிலும் உண்மையாகும்.

## துணைநின்ற நூல்கள்

1. ஏதுநாதன்., ப.அ., தமிழ் இலக்கிய வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41 சிட்கோ, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை- 2013
2. தங்கம் மூர்த்தி., தங்கம் மூர்த்தி கவிதைகள், வள்ளல் அழகப்பர் பதிப்பகம் அழ நாராயணன், மலர் மதி இல்லம், காரைக்குடி – 2017.
3. தங்கம் மூர்த்தி., தேவதைகளால் தேடப்படுபவன், படி வெளியீடு, சென்னை – 2016.
4. மாணிக்கம்.வ.சுப., திருக்குறள் தெளிவுரை, அம்பிகா கல்வி அறக்கட்டளை குறள்நெறி பதிப்பகம், கம்பன் நகர், புதுக்கோட்டை - 2013
5.